
# தமிழ் படி

(முதல் இதழ்)

31




OF THE REGISTRAR OF BOOKS
6 - JUL 1954
MADRAS
31
3-54

## தென்னிந்திய முதியோர் கல்வி கூட்டுறவு கழகப் பதிப்பகம், லிமிடெட்.

### முதியோர் கல்வி இயக்க வெளியீடுகள்

| | | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|
| 1. | தமிழ் படி (முதல் இதழ்) | ... | 0 | 3 | 0 |
| 2. | ,, (இரண்டாம் இதழ்) | ... | 0 | 3 | 0 |
| 3. | ,, (மூன்றும் இதழ்) | ... | 0 | 3 | 0 |
| 4. | Home Chart (பெரியது) | ... | 0 | 8 | 0 |
| 5. | ,, (சிறியது) | ... | 0 | 2 | 0 |
| 6. | கிராம சுகாதாரம் | ... | 0 | 1 | 0 |
| 7. | இயற்கை யந்திரம் | ... | 0 | 1 | 0 |
| 8. | மாரி க்யூரி | ... | 0 | 1 | 0 |

### அரசாங்க வெளியீடுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | உடுப்பது நான்கு முழம் | ... | 0 | 2 | 0 |
| 2. | குறைவற்ற செல்வம் | ... | 0 | 2 | 0 |
| 3. | சுத்தம் சோறு போடும் | ... | 0 | 2 | 0 |
| 4. | இன்ப வாழ்க்கை | ... | 0 | 2 | 0 |
| 5. | மகாத்மா காந்தி - புத்தர் | ... | 0 | 2 | 0 |
| 6. | சில செய்திகள் | ... | 0 | 2 | 0 |
| 7. | இதையும் தெரிந்துகொள் | ... | 0 | 2 | 0 |
| 8. | நம் வாழ்வு | ... | 0 | 2 | 0 |
| 9. | வான வீதி | ... | 0 | 2 | 0 |

### Dr. லாபக் முறையில் எழுதிய புத்தகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அறிவாளி ஆனந்தன் (முதல் புத்தகம்) | ... | 0 | 3 | 0 |
| ,, (இரண்டாம் புத்தகம்) | ... | 0 | 3 | 6 |
| ,, (மூன்றும் புத்தகம்) | ... | 0 | 3 | 6 |
| ,, (நான்காம் புத்தகம்) | ... | 0 | 3 | 6 |

தெலுங்கு, மலையாளம் முதியோர் கல்வி சார்ட்டுகளும், புத்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

---

தலைமை காரியாலயம் :

**10, நரஸிங்கபுரம் தெருவு, சென்னை-2.**

போன் : 85397.

# தமிழ் படி

[40 நாட்களில் தானே தமிழ் கற்கும் முறை]

ஆசிரியர் :

முதியோர் கல்வி - கோபால்

தென்னிந்திய
முதியோர் கல்வி கூட்டுறவு கழகப்
பதிப்பகம், லிமிடெட்,

10, நரசிங்கபுரம் தெருவு, சென்னை-2.

டெலிபோன் : 85397

முதல் பதிப்பு மே 1945
இரண்டாம் பதிப்பு டிசம்பர் 1947
மூன்றும் பதிப்பு ஜுலை 1948
நான்காம் பதிப்பு மார்ச் 1950
ஐந்தாம் பதிப்பு நவம்பர் 1950
ஆறும் பதிப்பு ஜுலை 1951
ஏழாம் பதிப்பு அக்டோபர் 1951
எட்டாம் பதிப்பு ஜுன் 1952
ஒன்பதாம் பதிப்பு பிப்ரவரி 1953
பத்தாம் பதிப்பு செப்டம்பர் 1953
பதினொன்றும் பதிப்பு மார்ச் 1954

Printed at
The Central Co-operative
Printing Works, Ltd.
1/17, Mount Road, Madras-2

விலை 3 அணு

# முன்னுரை

## நம் நாட்டின் விதியா அல்லது கதியா?

கலைகள் பல நிலவி ஞானவொளி வீசி நில முழுதும் நலமே நல்கி வந்த நாடே நமது தாய் நாடு "தமிழ் நாடு" எனினும் பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையுமில்லை பயனுமில்லை. வெளிநாடுகளில் நாள்தோறும் நூற்றுக் கணக்கான நூல்களும், லட்சக்கணக்கான பத்திரிகைகளும் பிரசுரிக்கப்படுகின்றன. அந்த நாட்டு மக்கள் அவற்றை ஆவலுடன் வாங்கி, தேசாபிமானமும் உலகியலறிவும், ஒற்றுமையுணர்ச்சியும் ஓங்கப்பெற்று, சுதந்திர மக்களாய் சுகவாழ்வு நடத்துகின்றனர். அந்தோ! நம் நாட்டில் வசிக்கும் கோடிக்கணக்கான மக்களைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். தமக்கு அன்புடன் எழுதிய கடிதங்களைப் படிக்கத் தெரிந்தவர் எத்தனை பேர்? புத்தகங்களையும் பத்திரிகைகளும் அவற்றிலுள்ள அறிய பெரிய செய்திகளையும் படித்துத் தெரிந்துகொள்ள எத்தனை பேரால் முடியும்? மனித வாழ்க்கையைப் புனிதப்படுத்தவல்ல அறிஞர்களின் கட்டுரைகளைப் படித்து 'அறிந்துகொள்ளக் கூடியவர் நம் நாட்டில் நூற்றுக்கு எத்தனை பேர்? ஐந்து என்றால் அதிகம். வான்புகழ் கொண்ட வள்ளுவனும், கல்வியிற் பெரிய கம்பனும் தோன்றிய நம் நாட்டில் இன்று 100-க்கு 95-பேர் முகத்தில் கண்ணுடையவர்களாயிருந்தும் புண்ணுடையவர்களைப் போன்று குருட்டு வாழ்க்கை நடத்துகிறார்களென்றால், இந்நாட்டுக்கு இதைவிடக் கேவலம் என்னவேண்டும்? நம்மிடையே எழுத்தறியாமை என்ற பெரும் பூதமாகிய, முதல் விரோதி இருக்கும் மட்டும் நம் நாடு சமூகத்துறையிலோ, அரசியல் துறையிலோ பொருளாதாரத்துறையிலோ, தொழிற் கல்வித் துறையிலோ முன்னேறக் கூடுமென்று நினைப்பது கனவேயாகும்.

மக்களிடத்திலுள்ள பகுத்தறிவை பிரகாசிக்கச் செய்யும் ஆற்றல் எழுத்தறிவுக்கு உண்டு. தமிழ் மறையும், "எழுத்தறிந்தோரே மக்கள் ஏனையோர் மாக்கள்" என்று எழுத்தறியாமையைக் கூறுகிறது. சுருங்கக்கூறின் எழுத்தறிவானது இந்நாட்டு மக்கள், சிறுபான்மையினரான படித்தவர்களின் ஏமாற்றத்திலிருந்து தப்பி சுதந்திர நாட்டில் அன்பும், அறமும் பொருந்திய சுகவாழ்க்கை நடத்தப் பெரிதும் துணை செய்வதாகும்.

எனவே, எழுத்தறிவிப்பும், வயது வந்தோர் கல்வியும் காலதேச வர்த்தமானங்களுக்கிணங்க இச்சமயம் அவசியமாகவும், அவசரமாகவும் செய்யப்படவேண்டிய முக்கிய வேலையாகும். இதுபற்றியே நமது 'தமிழ் படி' இதழ் தோன்றியிருக்கிறது, சாதி, மதம், கட்சி முதலிய தடைகளைக் கடந்து தமிழ்க்கலை, தமிழ் நடை, தமிழ் உடை, தமிழ் பாவனை, தமிழ் அன்னையின் அன்பு முதலியவைகளை ஒவ்வொரு தமிழனும் இச்சித்து இன்புறச் செய்ய எழுத்து அறிவுபெற்ற பாலர், பெரியோர், ஆண், பெண் அடங்கலாக எல்லாத் தமிழ் மக்களையும், ஒன்று கூட்டி பட்டாளமாக்கி "கல்வி இன்மை" என்ற திரண்டு ஓங்கி நிற்கும் பூதத்தை ஒழிக்க நமது 'தமிழ் படி' தொண்டு செய்யும், 'தமிழ் படி' அடங்கா வெற்றிகொண்டு நடக்க தமிழன்பர்களனைவரும் ஆதரிப்பார்கள் என்பது திண்ணம்.

'தமிழ் படி' முதல் இதழ், மதுரை திருவாளர் T. V. சுந்தரம் அய்யங்கார் அவர்கள் திருக்குமாரர் திரு. T. S. ராஜம் அவர்களின் நன்கொடையால் 1945-ம் ஆண்டு முதல் பிரசுரிக்கப்பட்டது. இன்று நமது 'தமிழ் படி' கண்ட பெரும்வெற்றியினால் இவ்வாண்டு பதினொன்றும் பதிப்பாக சில திருத்தங்களுடன் வெளிவருகிறது. இதைத் தொடர்ந்து பல இதழ்கள் பாட்டாளி மக்களின் வாழ்க்கையையும், தொழிலையும் ஒட்டி வெளிவரும். இவைகளுக்கும் நமது தமிழகத்தில் அளவுகடந்த ஆதரவு அளிக்கக் கோருகிறோம்.

வட ஆற்காடு ஜில்லா, செங்கம் தாலுக்கா முதியோர் கல்விச் சங்கம்' எங்கள் பாட திட்டத்தைப் பல கிராமங் களில் புகுத்தி நடை முறையில் நடத்திய அனுபவத்தின் பயனாகப் பல யோசனைகளையும், திருத்தங்களையும் காட்டி இப்புத்தகத்தை வெளியிட தூண்டியதற்கு எங்கள் நன்றி உரியது. செங்கம் தாலுக்காவில் பள்ளிக்கூட மேற்பார்வை உத்தியோகத்திலிருந்த திரு. A. G. வில்வராய் அவர்களும், செங்கம் தாலுக்கா முதியோர் கல்விச் சங்கத் தலைவர் திரு. M. B. ரங்கசாமி செட்டியார், திருவாளர்கள் P. R. குப்புசாமி செட்டியார், M. பாலகிருஷ்ண நாயுடு, A. அப்பாவு நாயுடு, S. கோபால் செட்டியார், மதுரை L. கிருஷ்ணசாமி பாரதி முதலிய நல்லறிஞர்கள் திருத்தமான பல யோசனைகளைக் கூறி, ஆசி அளித்ததற்கு எங்கள் மனமார்ந்த வந்தனம்.

(முதியோர் கல்வி)

டி. ஜே. ஆர். கோபால்.

---

# படிப்பிப்பவருக்கு குறிப்புகள்

**'தமிழ் படி'** முதல் புத்தகம் எங்களுடைய பல ஆண்டுகளின் அனுபவப் பயனாகவும், வட ஆற்காடு ஜில்லா, செங்கம் தாலுக்காவில் நடத்திய எழுத்தறிவு இயக்கத்திற் கிடைத்த சிறந்த அனுபவத்தின் பலனாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டில் வசிக்கும் எழுத்தறிவு பெற்ற ஒவ்வொரு தமிழனும் எழுத்தறிவில்லா ஒவ்வொரு தமிழனுக்கும் எழுத்தறிவிக்க வேண்டுமென்பதே இதன் நோக்கம். ஆதலால் படிப்பில்லாமலிருக்கும் வயது வந்தவர்களின் மனோபாவத்தை ஒட்டியே எழுதியுள்ளது. வயது வந்தவர்களும், பாலர்களும் வெகு சீக்கிரமாகவும் சுலபமாகவும் இம் முறையைக் கையாண்டால் பலனளிக்கும் என்பது எங்களுடைய அனுபவ திண்ணமான நம்பிக்கை.

## வயது வந்தவர்களின் மனோபாவமும், படிப்பித்தலும்

வயது வந்தவர்கள் படியாதவர்களாய் இருப்பினும் அவர்கள் பல விஷயங்களில் அறிவுள்ளவர்கள். வாழ்க்கையின் அனுபவத்தினால் பொது விஷயங்களை வெகு சுலபமாக ஏற்றுக்கொள்ளவும் அதைத் திரும்ப விளக்கிப் பிறருக்குச் செவ்வனே சொல்லவும் திறமையுள்ளவர்களாதலால் அவர்களுக்கு ஒழிவு நேரங்களில் அன்புடனும், விடாமுயற்சியுடனும் கற்பித்தால், ஆறே வாரங்களில் படிக்க எழுதப் பழக்கிவிடலாம். முதலில் அவசரப்படாமல் வர வர வேகம் அதிகரிக்கலாம். அதற்குத் தக்கவாறு பாடங்களும் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவர்கள் தப்பிதம் செய்தால் கோபமோ, பரிகாசமோ, தப்பிதத்தை தப்பிதமென்று சொல்லுதலோ கூடாது. அவ்விதம் செய்தால் அசட்டை ஏற்பட்டு, ஆர்வம் குறைந்து படிக்கப் பிரியப்படமாட்டார்கள். குழந்தைகளுக்குக் கற்பிக்கும் முறை வேறு, முதியோர்களுக்குக் கற்பிக்கும் முறை வேறு. குழந்தைகளுக்குக் கற்பிப்பதுபோல் வகுப்பு அறைப்பள்ளி வெகுவாகப் பலனளிக்காது. அவர்களுக்குத் தனித்தனியே அவரவர்களின் மனோபாவத்தை ஒட்டியே, ஒழிவு நேரங்களிலும், அவர்கள் இடங்களிலேயே கற்பிப்பது சிறந்தது.

எனவே, வயது வந்தவர்கள் மனோபாவத்துக்கும், குழந்தைகளின் மனோபாவத்துக்கும்—வேற்றுமையை அறிந்து படிப்பிக்கும் ஒவ்வொருவரும் அதற்குத் தக்கவாறு வேலை செய்தல் வேண்டும். படிக்க பழகுபவரைக் கௌரவத்துடனும்; வெகு அன்புடனும், பிழைகள் செய்தபோது சாமர்த்தியமாக நடத்த அறிந்துகொள்ளுதலும் வேண்டும்.

## உபகரணங்கள்

குழந்தைகளுக்கு ஏற்ற வகுப்பறைப் பாட திட்டங்களும், கால அட்டவணையும், மற்றப் பள்ளி சட்ட திட்டங்களும் இவ்வியக்கத்துக்குப் பலனளியா. எழுத்தறிவு இயக்கம் பலனடைய படித்தவர் தொண்டாற்றல் அவசியம். கிராமங்களிலும், நகரங்களிலுள்ள பேட்டைகளிலும் படித்தவர்களைக் கொண்ட "கல்வியின்மையைப் போக்கும்" சங்கங்கள் நிறுவப்பட வேண்டும். அச் சங்கங்களின் பள்ளியில் படிக்கும் 15 வயதுக்கு மேற்பட்ட வாலிபரும், படிக்கத் தெரிந்த பெரியோர்களும் அங்கத்தினர்களாக இருக்கலாம். இதன் முக்கிய நோக்கம் படிப்பின்மையைப் போக்குதலும், படித்தவர்களைப் படியாதவர்களுக்குத் தங்கள் ஒழிவு நேரங்களில் அவர்கள் அண்டையிலுள்ள ஒருவருக்காவது கற்பிக்கத் தூண்டுதலும், படிக்கப் பழகியவர் மறுபடியும் படிப்பின்மை அடைதலைத் தடுத்தலுமாக இருக்கவேண்டும். அதற்குத் தக்கவாறு ஆறுமாத திட்டத்தை வகுத்துக்கொள்ளலாம். முதல் மாதத்தில் எழுத்தறிவு பெற்ற ஆர்வமுள்ள வாலிபர்களையும், பெரியோர்களையும் கொண்ட சங்கம் நிறுவுதல், வாலிபர்களுக்கு முதியோர் கல்வி முறையில் பயிற்சியளித்தல் அச்சங்கம் ஏற்பட்ட கிராமத்திலோ அல்லது பேட்டையிலோ படத்தவர், படியாதவர் கணக்கைத் தெரிந்துகொள்ளுதல், இரண்டாவது மாதத்தில், கல்வியின் அவசியத்தையும், அதனாலுண்டாகும் பலன்களையும் தனிப்படப் பிரசாரங்கள் செய்வதோடு பல அறிஞர்களை அழைத்து, கூட்டங்கள் நடத்தலும் வேண்டும். துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிச் செய்தித் தாள்கள், பள்ளிப் பிள்ளைகளைக் கொண்டு ஊர்வலம், பாட்டுகள் மூலமாகவும் பிரசாரம் செய்து முதியோர்கள் படிக்க ஆர்வத்தையும், ஆசையையும் ஊட்ட வேண்டும். படியா மக்கள் கூடுமிடங்களில் தமிழ் மொழி வெகு சுலபமாகவும், விரைவிலும் கற்றுக்கொள்ள முடியுமென்ற எண்ணத்தைப் பட (Chart) மூலமாக விளக்கிக்காட்டல் வேண்டும். இதற்கு ஏற்ற பாடங்களும், சுவரொட்டித் தாள்களும் எங்களிடம் கிடைக்கும். அவற்றைக்கொண்டு வெகு எளிதில் விளக்கலாம். மூன்றாவது

மாதத்தில் அவரவர்கள் ஓழிவு நேரங்களிலும், படிக்கும் இடங்களிலும் படிப்பிக்க ஆரம்பிக்கலாம். படிப்புப் பழக்கத்தைக் கல்வித் தொண்டர்கள் அன்புடனும், சாமர்த்தியத்துடனும் கற்பித்தால் ஒரு மாதத்திலேயே படிக்கப் பழக்கிவிடலாம். தாங்கள் கற்ற கல்வியைப் பிறருக்கு அவ்வப்போது கற்பிக்கச் செய்தால் எழுத்தறிவு வேகமாகப் பரவுதலோடு படிப்பின் பயனைப் பெறுவதுமன்றி அவர்களின் கவனமும் அதிகமாகும். மற்ற மூன்று மாதங்களில் சிறு அச்சுப் புத்தகங்களைப் படிப்பதுமல்லாது, கூட்டெழுத்துக் கடிதங்களையும், பத்திரங்களையும் படித்து அறிந்துகொண்டு அதற்குத் தக்க பதிலும் எழுதலாம். அதற்கு ஏற்றவாறு எங்கள் முறை அமைக்கப்பட்டிருக்கிறது. இம்மாதங்களில் படித்ததை எழுதவும், எழுதியதைப் படிக்கவும் வேண்டும்.

## பாட முறை

முதியோர் எழுத்தறிவு இயக்கம் வெற்றிபெற வேண்டுமானால் முதியோர்களின் மனோபாவத்திற்கு ஏற்ற பாட முறை முதலாக அமைந்திருக்கவேண்டும். அது எளிய முறையில் சீக்கிரத்தில் பயிலும்படி இருக்கவேண்டும் முதல் படித்தலும், இரண்டாவது எழுதுதலும், பிரசங்கங்கள் மூலமாகக் கேட்ட எழுத்துக்களையோ அல்லது பொருளையோ ஒலிவடிவமாக உரைப்பதே படிப்பு. வரிவடிவமுள்ள எழுத்துக்களினால் ஆகிய பதங்களை கண்ணால் கண்டு அவை யென்ன என்றறிந்து நாவினால் உச்சரிப்பதே படிப்பு. எனவே, படிப்பு முறையை மூன்றாகப் பிரிக்கலாம், (1) எழுத்து முறை, (2) பத முறை, (3) வாக்கிய முறை. இம் மூன்று முறைகளையும் கொண்டு ஆசிரியர்கள் பலர் அவரவர் கண்ட அனுபவங்களை எழுதியுள்ளனர். இவைகள் அநேகமாகப் பாலர்களுக்குப் பலனளிக்கக் கூடியதாக இருக்கிறதே ஒழிய முதியோருக்குப் பலனளித்ததாகத் தெரியவில்லை. வாக்கிய முறையிலும், பத முறையிலும் பெற்ற அனுபவத்தை ஒட்டியே எழுதியுள்ளார்கள். ஆனால் எமது 'தமிழ் படி' புத்தகம் மேற்கூறப்பட்ட மூன்று முறைகளையும் தழுவி எழுதியுள்ளது. இந்த முறை முதியோர்களுக்கு மட்டுமல்லாது குழந்தைகளிடமும் கையாண்டு பலனளித்திருக்கிறது.

## பாடம்

முதல் எழுத்து ப வரிசை. பாப்பா என்ற பதம் ப வரிசையிலிருந்தே கொடுக்கப்பட்டிருக்கிறது. ப வரிசையிலுள்ள எழுத்துக்

களும், பதங்களும், வாக்கியங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வரிசையிலுள்ள எழுத்துக்கள் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இடப் பக்கம் குறிலும், வலப் பக்கம் நெடிலும், அடியில் பை, பௌ, ப் என்ற மூன்று எழுத்துக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எழுத்துக்களை முதலாக படிப்பிக்க வேண்டும். தமிழிலுள்ள மொத்த எழுத்துக்களை எடுத்துக் காட்டுதல் கூடாது. இலக்கணங்களைக் கவனித்தல் கூடாது. தமிழில் 13 ஓசைகளைத் தெரிந்துகொண்டால் தமிழ் மொழியை ஒரே மாதத்தில் கற்கலாம். என்று அவர்களுக்கு ஆச்சரியப்படு முறையில் சொல்லுதல்வேண்டும். முதலில் 5 குறுகிய ஓசையுடைய எழுத்துக்களைச் சொல்க. பிறகு நீண்ட ஓசையுடைய எழுத்துக்களைச் சொல்லவும். இவைகளின் வித்தியாசத்தை எடுத்துக்காட்டவும். பிறகு குறுகிய நீண்ட பத்து ஓசைகளையும் அவர்களுக்கு விளங்கும்படி பாடிக்காட்டி, அல்லது உச்சரித்துக் காட்டி உங்களுடன் சொல்லச்செய்யவும். முதல் 10 ஓசைகளைச் சுலபமாக ஐந்து நிமிடங்களில் படிப்பித்து விடலாம், பத்து ஓசைகளுக்குப் பிறகு பை, பௌ, ப் ஓசைகளையும் பாடியோ, உச்சரித்தோ வித்தியாசத்தைக் காட்டல் வேண்டும். உச்சரிப்பு வித்தியாசம் தெரிவதற்கு நான்கு அல்லது ஐந்து தடவைகள் ப வரிசையிலுள்ள எழுத்துக்கள் மனதில் படியாத இடங்களில் சற்று நிதானமாகவே உச்சரித்தும், வித்தியாசங்களை விளக்கி அவர்களையும் நம்முடன் உச்சரிக்கச் செய்தல் வேண்டும். இம்மாதிரியாக முதல் எழுத்தாகிய ப வரிசையைக் கற்க சுமார் 8 அல்லது 10 நிமிடங்களாகும். இவ்வரிசையில் உச்சரிப்பைச் சரியாகத் தெரிந்துகொண்ட எந்த முதியோரும் தமிழிலுள்ள எந்த எழுத்து வரிசையைச் சொல்லும்படி சென்னாலும் வெகு எளிதாகச் சொல்ல முடியும். ப வரிசையிலுள்ள உச்சரிப்புகளைத் தெரிந்து அதிலுள்ள ஓர் எழுத்துப் பதங்கள், இரண்டெழுத்துப் பதங்கள், இப்பதங்களினால் ஆகிய வாக்கியங்களை எடுத்துக்காட்டல் வேண்டும். இவ்விதம் செய்வோமானால் முதல் பாடம் விரைவில் கற்றதினால் ஆச்சரியம் அடைந்து, ஆவலும், ஆசையும் அதிகமுண்டாகும். இரண்டாவது ட வரிசை கொடுக்கப்பட்டிருக்கிறது. ப வரிசையிலுள்ள எழுத்துக்களைக் கொண்டும், ட வரிசையிலுள்ள எழுத்துக்களைக் கொண்ட பதங்களும், வாக்கியங்களும் கோர்த்து கொடுக்கப்பட்டுள்ளது. அதே மாதிரி படிக்கத் தெரிந்த எழுத்துக்களைக் கொண்ட புதிய எழுத்துக்களுடன் அமைக்கப்பட்ட பாடங்களாக இருக்கின்றன. இதனால் முதியோருக்கு அசட்டையும், ஏமாற்றமும் ஏற்படாமல், கற்க...

ஆவலும் வேகமும் ஏற்படும். படிக்கும்பொழுது ஒவ்வொரு எழுத்தையும் முதியோர் கண்டறிவதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கிறது. புதிய எழுத்தைக் கற்கும்போது அதை வித்தியாசப்படுத்தியும் இருக்கிறது. எழுத்தறிவு இயக்கத்தில் முதலில் காதால் கேட்டதை பாடுதல் அல்லது சொல்லுதல். பிறகு காணுதல், கண்டதைப் பார்த்துச் சொல்லுதல், அஞ்சாவது படித்தல், கடைசியாக எழுதுதல்.

## எழுதுதல்

'தமிழ் படி' என்ற முதல் புத்தகத்தை மூன்று வாரங்களிலோ அல்லது ஒரு மாதத்திலோ முடித்துவிடலாம். தமிழ் மொழி எழுத்துக்கள் அநேகமாகக் கோடுகளினால் அமைந்திருப்பதாலும், பார்த்ததை மனதில் இருத்திக்கொள்ள முதியோர்கள் சக்தியுள்ளவர்கள் ஆதலாலும் அவர்கள் கைத்தொழில் திறமையுள்ளவர்கள் ஆதலாலும் வெகு எளிதாக எழுதப் பழகிவிடுவார்கள். அதுவும் பெண்கள் வெகு விரைவில் பழகலாம்.


# ஆனந்தம்

(புதியதாக எழுத்தறிவு பெற்றவர்களின் செய்தித்தாள்)

வாரம் இருமுறை வெளிவரும்.

புதிதாக எழுத்தறிவு பெற்றவர்களுக்கேற்ற கதைகள், கட்டுரைகள், உலக, நாட்டுச் செய்திகள், எளிய முறையில் எல்லோரும் படிக்கும்படி வெளிவரும்.

ஆண்டு சந்தா ரூ. 2 தனிப்பிரதி விலை ¼ அணா

காரியாலயம் :

10, நரசிங்கபுரம் தெரு, சென்னை-2.

முதல் பாடம்

# பாப்பா

| | | |
|---|---|---|
| ப | | பா |
| பி | பூ | பீ |
| | பை | |
| பு | | பூ |
| | போ | |
| பெ | | பே |
| | பூ பை | |
| பொ | | போ |

பை பௌ ப்

பாப்பா பூ பை

பாப்பா போ

# இரண்டாம் பாடம்

## டப்பி

| | | | |
|---|---|---|---|
| ட | படி | டப்பா | டா |
| டி | பாடு | பாட்டா | டீ |
| டு | பிடி | பாட்டி | டூ |
| டெ | படை | பிட்டு | டே |
| டொ | போடு | பொட்டு | டோ |

டை டௌ ட்

பூட்டுப் போட்ட பெட்டி

பாடுபட்டு பாட்டைப் படி

பட்டு! பட்டே படிப்பு

## மூன்றாம் பாடம்

# சட்டி

| | | | |
|---|---|---|---|
| ச | செடி | சொட்டு | சா |
| சி | சபை | பூச்சி | சீ |
| சு | சாட்டை | சீப்பு | சூ |
| செ | பசு | பச்சை | சே |
| சொ | சூடு | சேட்டு | சோ |

சை     சௌ     ச்

பாடுபட்டுச் சாப்பிடு

சாப்பாடு சாப்பிட்டுப் பேசு

சட்டசபைப் போட்டிச் சிட்டைப் படி

## நான்காம் பாடம்

# த ச் சு

| | | | |
|---|---|---|---|
| த | தா | தட்டு | தா |
| | தீ | துப்பு | |
| தி | தை | தொட்டி | தீ |
| | திசை | பத்து | |
| து | தேதி | புத்தி | தூ |

| | | |
|---|---|---|
| தெ | பை தை | தே |
| | பாத்தி தடு | |
| | தீப் பெட்டி | |
| தொ | தோசை தட்டு | தோ |

தை தௌ த்

சீதா! சூது பேசாதே

பை தைத்துத் தா

தீப்பெட்டி பத்து பைசா

ஐந்தாம் பாடம்

# கூ த் தி

| | | | |
|---|---|---|---|
| க | கதை | கட்டி | கா |
| | காது | கெட்டது | |
| கி | குடை | கேட்டது | கீ |
| | கூடு | கொட்டை | |
| கு | கை | கோட்டை | கூ |
| | குத்தகை பேசு | | |
| கெ | காட்டுக் கட்டை | | கே |
| | படக் காட்சி | | |
| கொ | கெட்டிக் காப்பு | | கோ |
| | கூட்டுத் தொகை | | |

கை கௌ க்

புதுக் கொட்டகை கட்டு

கொட்டகை கட்ட குத்தகை பேசு

கொசுக் கடி கெடுதி

ஆறும் பாடம்

# நந்தை

| | | | |
|---|---|---|---|
| ந | நகை | நாக்கு | நா |
| | நாடு | நீட்டு | |
| நி | நிதி | தந்தி | நீ |
| | நீதி | பந்து | |
| | நொடி | பூந்தி | |
| நு | | | நூ |

நடை பாதை
நாட்டுச் சேதி
நிதி தேடு
சந்தைக் கடை
சாந்துப் பொட்டு

நெ நே நொ நோ

நை நௌ ந்

நாட்டுச் சேதி பேசு

சொந்த நாட்டுக்குப் பாடுபடு

நாட்டைக் காட்டிக் கொடுக்காதே

ஏழாம் பாடம்

## ம ந் தை

| | | | |
|---|---|---|---|
| ம | மடு<br>மாடு | மாடம்<br>மெத்தை | மா |
| மி | பூமி<br>மூடு | மொட்டை<br>மை | மீ |
| மு | மேடு | பாம்பு | மூ |

மாட்டு மந்தை
பூ மொட்டு
மாடு கட்டு
மைக் கூடு
பாம்புக் கடி

| | |
|---|---|
| மெ | மே |
| மொ | மோ |

மை மௌ ம்

மாட்டுக் கொட்டகை கட்டி முடிந்ததா?

மாடு பாம்பை மிதித்தது

பாம்பு மாட்டைக் கடித்தது

எட்டாம் பாடம்

# ப ழ ம்

| | | | |
|---|---|---|---|
| ழ | பழி | பழுது | ழா |
| | பாழ் | மெழுகு | |
| ழி | புழு | கிழி | ழீ |
| | கோழி | தமிழ் | |
| ழு | தழை | கொழும்பு | ழூ |
| ழெ | தாழம் பூ<br>தமிழ்ப் பாடம் | | ழே |
| ழொ | முழுப் பழம்<br>கோழிக் கூடு | | ழோ |

ழை ழௌ ழ்

நமது மொழி தமிழ் மொழி

தமிழ்ப் பாடம் படிக்கப் பழகு

பாடிப் படிக்கப் பழகிப் புகழ் தேடு

ஒன்பதாம் பாடம்

# வழி

| | | | |
|---|---|---|---|
| வ | வா | வெட்டு | வா |
| | விடு | வம்பு | |
| வி | வீடு | வழக்கம் | வீ |
| | வைகை | வாக்கு | |
| | வெடி | வைகாசி | |
| வு | | | வூ |
| | பாக்கு வெட்டி | | |
| வெ | வெட்டி வேர் | | வே |
| | வீடு கட்டு | | |
| வொ | வைகை நதி | | வோ |
| | வைகாசி மாதம் | | |

வை     வௌ     வ்

வீடே படிப்பிடம்

வீட்டுக்குப் போக வழி காட்டு

கெட்ட வழக்கத்தை விட்டு விடு

# லட்டு

| | | | |
|---|---|---|---|
| ல | பல் | லாடம் | லா |
| | பால் | லீலை | |
| | காலை | பாலம் | |
| லி | கேலி | மல்லிகை | லீ |
| | லோபி | குல்லா | |
| லு | | | லூ |

மல்லிகைப் பூ
பட்டுக் குல்லா
காலைப் படிப்பு
பால லீலை
வெளவால் பல்

லெ லே லொ லோ

லை லௌ ல்

கலாசாலைப் படிப்பு கைத்தொழில் படிப்பாகாது

காலை பல் துலக்கிப் படி

கல்விக்கு விலை கொடுக்காதே

# ர தம்

| | | | |
|---|---|---|---|
| ர | மாரி | ரம்பம் | ரா |
| | பருத்தி | குதிரை | |
| ரி | ரூபா | ராத்திரி | ரீ |
| | ரேகை | ரொட்டி | |
| | ரோமம் | ரொக்கம் | |
| ரு | | | ரூ |

மாரிமுத்து
ரேகை பார்
ரொட்டி சுடு
ரொக்க ரூபா
குதிரைச் சவாரி

ரெ ரே ரொ ரோ

ரை ரௌ ர்

ரோடு போட்டால் ரதம் வரும்

பருத்திக்கு நல்ல விலை

ராத்திரி ரொட்டி சுடு

# முறம்

| | | | |
|---|---|---|---|
| ற | புறா | முற்றம் | றா |
| | கறி | பெற்றோர் | |
| றி | நூறு | புற்று | றீ |
| | பறை | காற்று | |
| று | குறி | நாற்று | றூ |
| றெ | கற்றறிந்தவர் | | றே |
| | பறை சாற்று | | |
| றொ | சற்று படி | | றோ |
| | பறக்கும் புறா | | |
| | நூற்ற நூல் | | |

றை றௌ ற்

பெற்றோர் படித்தால் குடும்பம் செழிக்கும்

கற்றவர் போற்றப்படுவர்

கைராட்டில் நூற்கக் கற்றுக்கொடு

# குளம்

ள ளி ளு ளெ ளொ

வெள்ளி வெளிச்சம்
கிளி குள்ளம்
கொள்ளு வேளை
பள்ளம் நாளை
பிள்ளை முள்ளு

முள் வேலி
செல்லப் பிள்ளை
மேடு பள்ளம்
மாலை வேளை
வெள்ளி வேலை

ளா ளீ ளூ ளே ளோ

ளை ளௌ ள்

பள்ளிக்கூடப் படிப்பு வேறு நம் படிப்பு வேறு

விளக்கு வைத்துவிட்டுப் படி

களத்து மேட்டுக்குப் போ

# ப ணா ம்

| | | |
|---|---|---|
| ண | துணி வெண்மை<br>பண்ணை திண்ணை | ணா |
| ணி | மணம் புண்ணாக்கு<br>தண்ணீர் சணல் | ணீ |
| ணு | தண்டு கிண்ணம் | ணூ |
| ணெ | கடைக் கண்<br>வெள்ளிக் கிண்ணம்<br>சணல் நார் | ணே |
| ணொ | வீட்டுத் தண்ணீர்<br>நூல் துணி | ணோ |

ணை ணௌ ண்

பசுவுக்குப் புண்ணாக்கு வை

வீட்டுத் திண்ணை
பள்ளிக்கூடத்துக்கு நல்லது

வீதிக்கு வீதி திண்ணைப்
பள்ளிக்கூடம் வேண்டும்

பதினைந்தாம் பாடம்

# ச ன் ன ல்

| | | | |
|---|---|---|---|
| ன | கனம் | கன்னன் | ன |
| | பனி | சன்னல் | |
| னி | தீனி | பன்னீர் | னீ |
| | மனை | தென்னை | |
| னு | நான்கு | பதினேழு | னூ |
| னெ | பனித் தண்ணீர் | | னே |
| | சன்னல் கதவு | | |
| னை | பதினெட்டு | | |
| | பனை மரம் | | |
| | பன்னீர் தெளி | | |

னை னௌ ன்

கன்னன், தட்டான், கொத்தன்
தொழிலாளர்கள்

தொழிலாளர்களுக்குப் படிப்பு
பலன் தரும்

நன்றாகப் படிக்கத் தெரிந்துகொள்

பதினாறாம் பாடம்

# வயல்

| | | |
|---|---|---|
| ய | யானை குயவன் | யா |
| | கயிறு வளையல் | |
| யி | வயது பயிர் | யீ |
| | மெய் பயித்தியம் | |
| | நெய் தையல் | |
| யு | | யூ |
| | யானைப் பாகன் | |
| யெ | நொய்யல் நதி | யே |
| | கயிறு திரி | |
| யொ | கல் வளையல் | யோ |
| | தையல் வேலை | |

யை யௌ ய்

வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சு

வெய்யில் வேளைகளில் பயிரிடாதே

பொழுது போக்கும் வேளையில்
படிக்கலாம்

# ஆப்பம்

| | | | |
|---|---|---|---|
| அ | அணு | எண்ணம் | ஆ |
| | ஆடு | ஊக்கம் | |
| இ | ஈ | ஐக்கியம் | ஈ |
| | உமி | ஒப்பம் | |
| உ | ஓசை | ஔவை | ஊ |
| எ | துன்பம் ஆகாது | | ஏ |
| | ஆல்மர விழுது | | |
| ஒ | இன்பம் உண்டு | | ஓ |

ஐ ஔ ஃ

ஆசிரியர் இல்லாமல் கல்வி கற்கலாம்

நீயும் படித்தல் அவசியம்

ஆசை கொண்டால் அனைத்தும் வந்துவிடும்

# பதினெட்டாம் பாடம்

## ஊ ஞ ச ல்

ஞ ஞா

இஞ்சி மஞ்சள்

ஞானி ஞாயிறு

ஞி ஞீ

புஞ்சை கஞ்சி

நஞ்சை வஞ்சனை

பஞ்சு பஞ்சம்

ஞு ஞூ

ஞாயிற்றுக்கிழமை

படித்த ஞானி

ஞெ ஞே

புஞ்சை நிலம்

காணி நஞ்சை

ஞொ ஞோ

தஞ்சாவூர்ப் பஞ்சு

ஞை ஞௌ ஞ்

ஞாயிற்றுக்கிழமை ஒழிவு நாள்

படித்த ஞானியிடம் போவோம்

வஞ்சனையில்லாமல் உழைப்போம்

பத்தொன்பதாம் பாடம்

# மா ங் காய்

| | | | |
|---|---|---|---|
| ஙு | குரங்கு | பனங்காய் | ஙூ |
| | தேங்காய் | நுங்கு | |
| ஙி | பங்குனி | தங்கு | ஙீ |
| | சங்கு | வாங்கு | |
| ஙு | தங்கை | தேங்கு | ஙூ |

நுங்கு விழுந்து
பங்குனி மாதம்
சங்கு ஊது
தங்கை வீடு
பணம் வாங்கு

ஙெ ஙே ஙொ ஙோ ஙை ஙௌ ங்

பங்குனி மாதத்தில் முதல்
புத்தகத்தை முடி
இரண்டாம் புத்தகம் சீக்கிரம்
முடிக்கலாம்
தினசரிப் பத்திரிகை வாங்கிப்
படிக்கலாம்

| | | |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| ஒன்று | இரண்டு | மூன்று |
| 4 | 5 | 6 |
| நான்கு | ஐந்து | ஆறு |
| 7 | 8 | 9 |
| ஏழு | எட்டு | ஒன்பது |
| 10 | 100 | 1,000 |
| பத்து | நூறு | ஆயிரம் |
| 10,000 | 1,00,000 | 10,00,000 |
| பத்தாயிரம் | லட்சம் | பத்து லட்சம் |

| | |
|---|---|
| 1,00,00,000 | 10,00,00,000 |
| கோடி | பத்து கோடி |

# என் அனுபவம்

காடு வா வா, வீடு போ போ என்று இருக்கும் சமயத்தில் படிப்பு பழக முடியுமோ என்று நினைத்திருந்தேன். என்ன ஆச்சரியம்! ஒரே வாரம், இரண்டு வாரம்கூட இல்லை. தமிழ் மொழியிலுள்ள எல்லா எழுத்துக்களையும் உபாத்தியாயரில்லாமலே படிக்கப் பழகிவிட்டேன்! ஆம்! எல்லாம் மொத்தம் பதிமூன்று ஓசைகள் தான், ஐந்து குறுக்கியும், ஐந்து நீட்டியும் சொல்ல வேண்டும். மற்ற மூன்று ஓசைகளைச் சுலபமாக இரண்டு அல்லது மூன்று தரம் சொல்லிப் பார்த்தால் வந்துவிடுகிறது பிரமாதமான இந்த படிப்புக்குப் பெரிய பள்ளிக்கூடம் வேண்டுமாம். உபாத்தியாயர் ஒருவரைத் தேடிப் பிடித்து அவருக்கு ஊதியம் கொடுத்து அவரால்தான் பாடம் படிக்கப் பழக வேண்டுமாம். கால அட்டவணையாம், பாட திட்டம், விடுமுறை நாட்கள், பெயர் பதியவும் எடுக்கவும் பேப்பர்கள், கரும்பலகைகள் முதலியவைகள் வேண்டுமாம், நான் நம்பவேமாட்டேன், தமிழ் மொழியில் அழகாகப் பாடும் முறையில் எழுத்துக்கள் அமைந்திருக்கின்றன. பதின்மூன்று ஓசைகளைக்கொண்ட முதல் வரிசையைப் பாடத் தெரிந்து கொண்டால் மற்ற வரிசைகள் எல்லாம் தானே தவழ்ந்து மனதில் தைத்துக்கொண்டு வெளிவரும். இந்தப் பாட்டைப் பிறருக்குப் பாடிகாட்டும் சமயத்தில் மனதில் பதிகின்றது. பலனளிக்கின்றது. இதைவிடச் சுலபம் வேறு என்ன வேண்டும்! அந்தோ! படியாத தமிழ் நாட்டு மக்களின் பரிதாப நிலைமை!

# வடமொழி எழுத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜ | | | ஜா |
| ஜி | ஜ ஸ ஷ | | ஜீ |
| ஜு | | | ஜூ |
| ஜெ | க்ஷ ஹ | | ஜே |
| ஜொ | | | ஜோ |

ஜை ஜௌ ஜ்

ஜனவரி ரஸம்

விஷம் பக்ஷணம்

ஹனுமான்

## கிழமைகள்

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | வியாழக்கிழமை |
| திங்கட்கிழமை | வெள்ளிக்கிழமை |
| செவ்வாய்க்கிழமை | சனிக்கிழமை |
| புதன்கிழமை | ஏழு நாட்கள் ஒரு வாரம் |

---

## தமிழ் மாதங்கள்

| | | |
|---|---|---|
| சித்திரை | ஆவணி | மார்கழி |
| வைகாசி | புரட்டாசி | தை |
| ஆனி | ஐப்பசி | மாசி |
| ஆடி | கார்த்திகை | பங்குனி |

---

## ஆங்கில மாதங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | மே | செப்டம்பர் |
| பிப்ரவரி | ஜூன் | அக்டோபர் |
| மார்ச் | ஜூலை | நவம்பர் |
| ஏப்ரல் | ஆகஸ்டு | டிசம்பர் |

பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருடம்

---

மக்களுக்காக, மக்களால் ஆக்கப்பட்ட முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை ஏழை மக்கள் அடையக் கூடிய எளிய விலையில் வெளியிட, நம் மாகாணத்தின் ஒரே ஒரு கூட்டுறவு பதிப்பகம்.

அரசாங்கத்தின் முதியோர் கல்வி இயக்கத்தின் வெளியீடுகளை வெளியிடும் பதிப்பகம்.

பாலர், முதியோர் கல்விப் பிரசுரங்கள், உபகரணங்கள் தயார் செய்து பதிப்பிக்கும் பதிப்பகம்.

முன் பணம் கட்டக்கூடிய, ஜில்லா, தாலூக்கா, பிர்கா விற்பனையாளர்கள் தேவை. தயவு செய்து விபரங்களுக்கு எழுதவும்.

ஜி. ஹரிசர்வோத்தம ராவ்,
தலைவர்

டி. ஜே. ஆர். கோபால்,
காரியதரிசி.